www.padippakam.com

# அரசுடன் கைகோர்க்கும் மக்கள் விரோதக் குழுக்கள் !

யுத்தம் பேச்சுவார்த்தை என்ற குண்டுச் சட்டிக்குள் ஓடிக் கொண்டிருக்கும் " ஈழவிடுதலைப் போராட்டக் " குதிரை போட்டு மிதித்துக் கொண்டிருக்கும் மனித உரிமைகளின் அவல ஓலங்கள் தொடர்ந்து கேட்டுக் கொண்டே இருக்கின்றன.

ஆரம்பத்தில் அரசுக்கு ஆதரவாகவும் , உளவாகவும் செயற்பட்ட தமிழர்களை சமூக விரோதிகளென கொலை செய்தமை, பின்னர் பசிக்காக திருடியவனையும் கொன்று கம்பத்தில கட்டி, சக குழுக்களிலிருந்த போராளிகளையும் கொல்லும் பரிணாம வளர்ச்சியடைந்து , சொந்தக் குழுவிலுள்ள சக போராளிகளையே கொல்லும் வெறியாகி, இன்று இலங்கையில் வாழ்ந்து கொண்டிருக்கும் சகல இன மக்களினதும் தொண்டையில் கத்தி வைத்துள்ளது.

ஆரம்பத்தில் சிங்கள மக்களைக் கொன்ற இனவெறி பின்னர் கூடி வாழ்ந்த முஸ் லீம் மக்கள் மீதும் பாய்ந்தது.

தொடக்கத்தில் பல்வேறு குழுக்களாக இருந்த " எங்கட பெடியள்" சமூகவிராதக் கும்பல்களாகி, எதிர் புரட்சிகர சக்திகளாகி, பாசிசப் பாதையில் நடை போட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இன்று இலங்கை அரச படைகளை எதிர்த்துப் போரிடும் அதே நேரம் சிங்கள முஸ்லீம் மக்கள் மீது இனவெறித் தாக்குதல்களை நடாத்துகின்ற, சொந்த மக்களையே வதை முகாம்களிலும் , வெளியேயும் வைத்து சித்திரவதை செய்கின்ற அணியாக புலிகள் ஒரு புறம்.

இலங்கை அரசுடன் கைகோர்த்து, அரச படைகளுடன் கூட்டாக புலிகள் மேற் கொள்ளுகின்ற அதே இனவாத , மனித உரிமை மீறல்களில் ஈடுபடுகின்ற அணியாக EPDP, TELO, ENDLF, PLOTE, EPRLF, EROS இனர் மறுபுறம்.

இதில் புலியின் மனித உரிமைகள் மீறல்களைப் பற்றிய துரோகத் தன்மைகள் அண்மைக்காலங்களில் பரவலாக வெளிச்சத்திற்கு வந்துள்ளன. அதே நேரம் மற்றைய தமிழ் குழுக்களின் மனித உரிமை மீறல்கள், துரோக நடவடிக்கைகள் மறைந்து விடுவதை அனுமதிக்க முடியாது.

இலங்கை அரசபடையினரின் ஒரு பிரிவினராகவே செயற்பட்டு வரும் தமிழ் இயக்கங்கள் தாராளமாக கடத்தல், கொலை, கொள்ளை, சித்திரவதை, பாலியல் பலாத்காரம் ஆகியவற்றில் முக்கிய பங்காற்றி வருகின்றன. EPDP யினர் கொழும்பிலும், ஊர்காவற்துறையிலும், ENDLF இனர் கொழும்பிலும் தமிழகத்திலும், TELO வினர் கிழக்கு மாகாணத்திலும், PLOTE இனர் வவுனியாவிலும், மட்டக்களப்பிலும் தங்கள் சமூகவிரோத நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியுள்ளனர்.

இவற்றில் சில :

1990 டிசம்பரில் ஊர்காவற்றுறையில் கிணறு ஒன்றிலிருந்து அழுகிய நிலையில 80 க்கு மேற்பட்ட தமிழர்களின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டன. இவர்கள் EPDP, இராணுவக் கூட்டினால் சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டவர்கள். சடலங்களுள் சித்திரவதைக் காயங்களுடன் 3 முதியவர்களின் சடலங்களும் இருந்தன.

யாழ்நகளிலிருந்து வருபவர்களும், புலிகளுக்குத் தப்பி வரும் தமிழர்களும் தங்கள் உடமைகளை வவுனியாவிலுள்ளPLOTEயிடம் பறி கொடுப்பதுடன், அவர்களால் பிடித்துச் செல்லப்பட்டு சித்திரவதை செய்யப்படுகின்றனர்.

மட்டுநகரில் மோகன் தலைமையிலான PLOTE இனர் முனாஸ் தலைமையிலான அதிரடிப்படையுடன் இணைந்து ஏராளமான தமிழ் இளைஞர்களைக் கடத்திச் சென்று அவர்களின் கண்களைத் தோண்டி எடுத்த பின்னர் கொலை செய்துள்ளனர். பல மாணவிகளைக் கடத்திச் சென்று இராணுவத்தினரின் பாலியல் இச்சைக்குப் பலியாக்கியுள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில் அரச படைகள் செய்த அட்டூளியங்கள் பலவற்றின் போது TELOவினர் அவர்களுடன் கூட இருந்துள்ளனர். இதைவிட தனியேயும் TELOபல தமிழர்களைக் கொலை செய்துள்ளது.

1991 ஒக்டோபரில் கனியரன் மைக்கல் என்பவரும், டிசம்பரில் டிக் என்ற இளைஞனும், 16 வயதான எலிசபெத் என்ற மாணவியும் தொண்டைக்குழி பிளேற்றினால் அறுக்கப்பட்டு, வாய்க்குள் இரும்புக் கம்பி செருகப்பட்டு கொல்லப்பட்டனர்.

ஏராளமான தமிழ்ப் பெண்கள் TELOவினால் கடத்தப்பட்டு பலரால் பாலியல் பலாத்காரத்திற்குட்படுத்தப்பட்டு கொல்லப்பட்டுள்ளார்கள். இப் பெண்கள் பின்னர் தலை துண்டிக்கப்பட்ட நிலையில் வீதிகளில் வீசப்பட்டார்கள்.

IPKF இருந்த காலத்தில் ENDLFஇனர் தம்முடன் இணைய மறுத்தவர்களை குறிப்பாக கிளிநொச்சியில் பெருமளவில் கொலைசெய்தனர். கிழக்கு மாகாணத்திலும் கொழும்பிலும் பல தமிழர்களிடம் கொள்ளையடித்தனர். தமிழகத்தில் தங்கியுள்ள இலங்கைத் தமிழர்களை கடத்தி பணம் பறிப்பதிலும் ENDLFஇனர் ஈடுபட்டுள்ளனர்.

சுயாதீன தகவல் மையம். க.பெ.இல. 2692 பேர்கன் நோர்வே

ம.பு.பா:

படிப்பகம்

www.padippakam.com

IPKF இனர் இருந்த காலத்தில் EPRLF இனர் தமக்கு எதிரானவர்கள் என்ற பெயரில் பல தமிழர்களைச் சித்திரவதை செய்து கொன்றனர். இவர்கள் பிரதான வதைமுகாமாக யாழ் அசோக் ஹோட்டலைப் பாவித்தனர். இம் முகாமிலிருந்து மலவாசலுக்குள் போத்தல் செருகப்பட்டு பல விதமான சித்திரவதைக்குட்பட்ட இளைஞர் ஒருவர் தப்பியிருந்தார்.
இந்த இயக்கங்கள் யாவும் புலிகளிடமிருந்து தப்பி கொழும்பிற்கு வரும் தமிழர்களைப் புலிகள் என இலங்கை அரச படையினரிடம் பிடித்துக் கொடுக்கின்றனர். தென்னிலங்கை அகதி முகாம்களில் தமிழ் அகிதகளைக் கடத்தி பலவந்தமாக போர்முனைகளில் புலிகளுக்கு எதிராக நிறுத்தியுள்ளனர்.
இலங்கை இராணுவத்துடன் போராடுகிறார்கள் என்பதற்காக புலிகளின் தலைமையை ஏற்றுக் கொள்வதென்பது தற்கொலைக்கு ஒப்பானதே. புலிகளை எதிர்க்கிறார்கள் என்பதற்காக அரசுடன் கூட்டுச் சேர்ந்துள்ள ஏனைய தமிழ் இயக்கங்களை ஆதரிப்பதும் தற்கொலைக்கு ஒப்பானதே.

## போராட்டத்திற்குத்தான் ஆதரவு --- பாஸிசத்திற்கல்ல !
## போராளிகளுக்குத்தான் ஆதரவு --- கொலைக் கும்பல்களுக்கல்ல !!
## விடுதலைக்குத்தான் ஆதரவு --- அடக்குமுறைக்கு அல்ல !!!
## சரியானதைத் தேடுவோம் அதையே முன்னெடுப்போம்

சுயாதீன தகவல் மையம், த.பெ.இல. 2692. பேர்கன், நோர்வே. பிரசுரம் இல 3